தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

நான்காம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2015**

**P104** காப்பியங்களும் சங்க இலக்கியமும்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. காப்பியம் என்று பெயர் பெறும் இரு நூற்களைக் குறிப்பிடுக.
2. ஆட்டனத்தி ஆதிமந்தி எழுதியவர் யார்?
3. புலவர்களின் கவித்திறனை வெளிப்படுத்தும் பேரெல்லையாகக் காட்டும் இலக்கிய வகை எது?
4. கம்பரை ஆதரித்தவரின் பெயர் என்ன?
5. குகன் யார்?
6. சகுனியின் சதியால் பணயப் பொருளாக வைக்கப்பட்டவள் யார்?
7. பொதுவுடைமைச் சமுதாயத்தை விரும்பிய நோக்கத்துடன் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படைத்த காவியம் எது?
8. பெரியாரின் இயக்கம் வெகுவாக எவர்களைக் கவர்ந்தது?
9. கண்ணதாசனின் அரசியல் வாழ்வின்போது சிறையில் பிறந்த காவியம் எது?
10. தமிழ் என்ற சொல்லின் பொருள் என்ன?
11. காமப் புணர்ச்சியின் வேறு பெயர்கள் இரண்டனைக் குறிப்பிடுக.
12. இருவகைக் குறிகள் எவை?
13. புறத்திணைகள் எத்தனை என்கிறார் தொல்காப்பியர்?
14. பதிற்றுப்பத்தின் ஆறாம் பத்தைப் பாடியவர் யார்?
15. சேரர்களின் ஆட்சி எல்லையாக இருந்தவை எவை?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பாரதியாரின் பாஞ்சாலி சபதம் – சிறு குறிப்பு எழுதுக.
2. வெற்றி வாழ்வைப் பெறும் நெறிகளாக விசயை கூறியவற்றைக் குறிப்பிடுக.
3. சூளாமணியில் தோலாமொழித் தேவர் சுட்டும் நிமித்தங்கள் பற்றி எழுதுக.
4. உடன்போக்கு என்றால் என்ன?
5. அன்பின் ஐந்திணை – குறிப்பு எழுதுக.
6. பாலைத்திணைப் புலவர்கள் – சிறு குறிப்பு எழுதுக.
7. கைக்கிளை – விளக்கம் தருக.
8. இளமை தீர் திறம் என்றாம் என்ன?

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) மணிமேகலை காப்பியத்தின் அமைப்பு, சிறப்புகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ் வளர்ந்த முச்சங்கங்கள் குறித்து விரிவாக எழுதுக.

2. (அ) முல்லைத் திணைப் பாடல்களில் அமைந்திருக்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் காட்டும் அகத்திணையின் முப்பொருள்களை விவரிக்க.

3. (அ) நெய்தல் திணையின் முப்பொருள்களை விளக்கி, அவை வெளிப்படும் தன்மையை விளக்குக.

(அல்லது)

(ஆ) வில்லி பாரதம் சுட்டும் கண்ணன் தூதுகளை விளக்கி வரைக.

✲✲✲